Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 41/2025** |
| Deposition of witness for | :: | **PW. 10** |
| Name | :: | **தசரதன் ( சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 09.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.01.2024ம் தேதி 11.25 மணிக்கு நான் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக கிராம ரோந்து அலுவலில் இருந்தபோது வாகன விபத்து சம்மந்தமாக நிலையத்திலிருந்து கிடைக்க பெற்ற தகவலின் பேரில் 11.45 மணிக்கு விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று அங்கு வாகன விபத்தில் காயம்பட்ட ஜோதியம்மாள் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் அதே விபத்தில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்த ஜாஸ்மின் பேபி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவினை பெற்றும், 15.15 மணிக்கு அதே வாகன விபத்தில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்த ஆட்டோ ஓட்டுநர் அந்தோனிபிச்சை என்பவரிடம் புகார் மனு பெற்ற விவரத்தை கூறியும் மாலை 04.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 16/2024 பிரிவு 279, 337 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல்

புகாரினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் நகலினை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் ராபியம்மாள் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. புகார் மனுவில் அசா.1னிடம் எத்தனை மணிக்கு கையெழுத்து வாங்கினேன் என்றால் 22.01.2024 அன்று காலை 11.45 மணியளவில் கையொப்பம் பெற்றேன். எனக்கு தகவல் கிடைத்தவுடன் எவ்வாறு 20 நிமிடத்தில் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் எனக்கு தகவல் கிடைத்தபோது நான் பாலவநத்தத்தில் ரோந்து பணியில் இருந்தேன், அதனால் 20 நிமிடத்தில் விருதுநகருக்கு சென்றுவிட்டேன். தகவல் கிடைத்த சமயத்தில் நான் பாலவநத்தம் பகுதியில் ரோந்து பணியில் இருந்ததை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரிதான்.

2. நான் மருத்துவமனைக்கு சென்றபிறகு புகாரானது எழுதப்பட்டதா அல்லது ஏற்கனவே மனுவானது எழுதி வைக்கப்பட்டு இருந்ததா என்றால் நான் சென்ற பிறகு தான் புகார் மனுவினை எழுதினார். யார் புகார் மனுவினை எழுதினார் என்றால் அசா.1ம் காயம்பட்டு இருந்த காரணத்தினால் அருகில் இருந்த ஒரு நபர் புகாரை எழுதி கொடுத்தார். வேறு ஒரு நபரால் புகாரானது எழுதப்பட்டது என்று வழக்கு ஆவணங்களில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் அந்த நபர் புகாரில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார், அவருடைய பெயர் தாஸ் ஆகும். மேற்படி தாஸ் தான் புகாரை எழுதினார் என்று வழக்கு ஆவணங்களில் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

3. விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் பதிவு எண் மற்றும் எதிரியின் விவரங்களை எவ்வாறு புகார்தாரர் தரப்பில் புகாரில் எழுதியுள்ளார்கள் என்றால் அவர்களே விசாரித்து தெரிந்து கொண்டு எழுதியதாக என்னிடம் கூறினார்கள். மேற்படி தாஸ் என்பவர் சாட்சி கையெழுத்தை புகார் மனுவில் எங்கு வைத்து செய்து கொடுத்தார் என்றால் விருதுநகர் அரசு மருத்துவமனையில் வைத்து தான் செய்து கொடுத்தார். மேற்படி தாஸ் அசா.3 ஆக விசாரணை செய்தபோது அவருடைய குறுக்கு

விசாரணையில் மேற்படி சாட்சி கையெழுத்தை மாலை 06.00 மணியளவில் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் புகார் மனுவானது சொன்ன முறையில் சொன்ன நாள் தேதி நேரத்தில் முறையாக அசா.1 னிடம் இருந்து பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 41/2025** |
| Deposition of witness for | :: | **PW. 9** |
| Name | :: | **பழனிமுருகன்** |
| Father's Name | :: | **வல்லத்து** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**09.06.2026**
**முதல் விசாரணை**

1. நான் காரியாபட்டியில் குடியிருந்து அருப்புக்கோட்டை சந்திரா டிரான்ஸ்போர்ட்டில் மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். கடந்த மூன்று வருடத்திற்கு முன்பு பாலுவும் (அசா.8) நானும் தாலுகா காவல் நிலையத்திற்கு வழக்கின் எதிரியான மாரிமுத்துவுடன் சென்றிருந்தபோது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். என்முன்பாக போலீசார் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. **(பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி**

**வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. கடந்த 22.01.2024 ம் தேதி காலை நான் பணி செய்யும் சந்திரா கம்பெனி பஸ் பாலவநத்தம் கிராமத்தில் விபத்தானதை கேள்விபட்டு நானும், எங்கள் பஸ் கம்பெனி மேனேஜர் பாலுவும் மாலை சுமார் 05.00 மணியளவில் பாலவநத்ததில் உள்ள சம்பவம் இடம் சென்று விசாரித்து கொண்டிருந்தபோது அருப்புக்கோட்டை தாலுகா போலீசார் குற்ற எண். 16/2024 வழக்கில் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு நானும், பாலுவும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**